DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | | |
|---|---|---|
| Calender | } | |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | Case No.SC.171/2019 |

| | | |
|---|---|---|
| Deposition of Witness | { | PW.18 |
| | { | Prosecution |
| | { | |

| | |
|---|---|
| Name | : பெருமாள் |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2025.

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.18 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

14, 18 மற்றும் 22 ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் வெள்ளையம்பாளையம் வடக்கு தெருவில் வசிக்கிறேன். நான் லாரி ஓட்டுநர் தொழில் செய்கிறேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு சமயத்தில் நான் புல்டோசர் சொந்தமாக வைத்து தொழில் செய்து வந்தேன். நான் கடந்த 2006 ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை ஒரு நாள் என் தங்கை கமலா என்பவர் என்

பெயருக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுப்பதற்காக நான் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அதற்காக நான் பத்திர எழுத்தர் ரங்கநாதன் என்பவரை அனுகினேன். அவரிடம் தான் நான் எப்போதும் பத்திரம் எழுதுவேன். அன்று என்னுடன் என் நண்பர் ராமசந்திரன் என்பவரும் அங்கு வந்திருந்தார். அன்று சடையன் என்பவர் முருகேசன் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுப்பதற்காக அங்கு வந்ததிருந்தார். அந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யுமாறு என்னையும், என் நண்பர் ராமசந்திரன் என்பவரையும் பத்திர எழுத்தர் ரங்கநாதன் கேட்டுகொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக கடந்த 2 மாதங்களாக தான் என்னை சாட்சி சொல்ல வருமாறு போலீசார் தகவல் கொடுத்து அதனடிப்படையில் நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான்.

(மற்ற எதிரிகள் 1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.)

ஒப்பம்/-பெருமாள்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.